


11.03.2025

தலைப்புசெய்திகள்

- பெண்களின் முன்னேற்றமே சமூக மேம்பாட்டிற்கான அடித்தளம் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதிமுர்மு தெரிவித்துள்ளார்.
- மொரீஷியஸுடன் இணைந்து புதிய துறைகளில் செயலாற்றுவதற்கான வாய்ப்புகளை தாம் எதிர்நோக்கி உள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட விதி மீறல்களை கண்டறிய கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்படும் என்று மத்திய அமைச்சர் திரு.ஷிவ்ராஜ் சிங் சவ்ஹான் கூறியுள்ளார்.
- சென்னை மறைமலை நகரில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தாவரவியல் பூங்கா அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- கன்னியாகுமரி திருநெல்வேலி தென்காசி தூத்துக்குடி மாவட்டங்களுக்கு இன்று மிக கன மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

குடியரசு தலைவர்

பெண்களின் வளர்ச்சியே சமூகத்தின் வளர்ச்சி என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதிமுர்மு தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மத்திய பல்கலைகழகத்தின் 10ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், கல்வியில் சிறந்த பெண்கள் வலுவான சமூகத்தை கட்டமைப்பதாக பெருமிதம் தெரிவித்தார்.

இவ்விழாவில் 65 சதவிகித பெண்கள் பதக்கங்களை வென்றிருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த குடியரசு தலைவர், வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கு சிறப்பான பங்களிப்பை இவர்கள் வழங்குவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஆர்வம், சுயம், ஒழுக்கம், தொலைநோக்குபார்வை, தன்னிச்சை ஆகிய 5 பண்புகளும் வாழ்க்கைக்கு மிக அவசியம் என்று அறிவுறுத்திய அவர் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் திகழ்ந்தார் என்று புகழாரம் சூட்டினார்.

ஒழுக்கமான நெறிமுறைகளே வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்றும் வெற்றியை விட ஒழுக்கம் முதன்மையானது என்றும் குறிப்பிட்டார்.

**********

பிரதமர்

மொரீஷியஸ் தலைநகர் போர்ட் லூயிஸ் சென்றடைந்த பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு அந்நாட்டு பிரதமர் திரு. நவீன் சந்திரா ராம்கூலம் சிறப்பான வரவேற்பை வழங்கினார்.

விமான நிலையத்தில் தம்மை வரவேற்ற மொரீஷியஸ் பிரதமருக்கு நன்றி தெரிவித்த பிரதமர் திரு.நரேந்திரமோடி, திரு. நவீன் சந்திராவுடன் இணைந்து

பல்வேறு துறைகளில் செயலாற்றுவதற்கான புதிய வாய்ப்புகளை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாக குறிப்பிட்டார்.

மொரிஷியஸ் அதிபர் திரு. தரம் கோகூலை தாம் இன்று சந்திக்க இருப்பதாகவும் சமூக நிகழ்ச்சியில் பங்கேற்க இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

திறன்மேம்பாடு தொடங்கி, சமூக கட்டமைப்புவரை இந்திய நிதியுதவியுடனான 20 புதிய திட்டங்களை பிரதமர் மொரீஷியஸில் தொடங்கிவைக்கிறார்.

நாளை அந்நாட்டின் தேசிய தின கொண்டாட்டங்களில் பிரதமர் திரு.நரேந்திரமோடி பங்கேற்கிறார்.

**********

ஷிவ்ராஜ் சிங் சவ்ஹான்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செயலாக்கத்தின் விதி மீறல்களை கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள கண்காணிப்பு குழுக்கள் அனுப்பப்படும் என்று மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.ஷிவ்ராஜ் சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதில் அளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இத்துறையின் இணை அமைச்சர் திரு.கம்லேஷ் பாஷ்வான் பேசுகையில் அண்மை காலங்களில் இந்த திட்டத்திற்கு நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு அதிகரித்துள்ளதாக கூறினார்.

இப்பணியாளர்களுக்கு நிலுவையில் உள்ள ஊதிய தொகை விரைவில் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

**********

மாநிலங்களவை ஜே.பி.நட்டா

நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அடுத்த 3 ஆண்டுகளில் புற்று நோய் காப்பகங்கள் திறக்கப்படும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர் இதன்படி வரும் நிதியாண்டில் 200 காப்பகங்கள் தொடங்கப்படும் என்றார்.

ஆயுஷ்மான் பாரத், பிரதமரின் ஜன் ஆரோக்கிய திட்டத்தின் கீழ் புற்றுநோய் கண்டறியப்பட்ட 30 நாட்களுக்குள் சிகிச்சை பெறுவதற்கு வகை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் குறைந்த செலவில் தரமான சிகிச்சைகளை மக்கள் பெற அரசு செயலாற்றி வருவதாகவும் திரு.நட்டா குறிப்பிட்டார்.

**********

மாநிலங்களவை

போலி வாக்காளர் அடையாள எண் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மாநிலங்களவை இன்று நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

அவை இன்று கூடியதும் துணை தலைவர் திரு.ஹரிவன்ஸ் எதிர்கட்சிகள் இப்பிரச்சனை தொடர்பாகவும், தென்மாநிலங்களில் தொகுதி வரையறை குறித்தும் கொண்டுவந்த ஒத்திவைப்பு தீர்மானங்களை நிராகரித்தார்.

இப்பிரச்சனைகளில் திமுக, காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் குரல் எழுப்பியவாறு காணப்பட்டனர்.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட எதிர்கட்சியினரை தங்களது இருக்கைகளுக்கு திரும்புமாறும், அவையை சுமூகமாக செயல்பட அனுமதிக்குமாறும், துணை தலைவர் விடுத்த கோரிக்கைக்கு, யாரும் செவி சாய்க்காமல் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், நண்பகல் 12 மணிவரை மாநிலங்களவை ஒத்திவைக்கப்பட்டது.

**********

திமுக ஆர்பாட்டம்

தேசிய கல்வி கொள்கை மற்றும் மும்மொழி பிரச்சனை தொடர்பாக திமுக உறுப்பினர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி மத்திய அரசு, தமிழக கல்வி துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கோரினார்.

இதனிடையே ஊக்கத்தொகை அதிகரிக்கப்பட வேண்டும் என்ற ஆஷா பணியாளர்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து கேரள மாநிலத்தின் UDF உறுப்பினர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**********

உளுந்து

வரியில்லா உளுந்துக்கான இறக்குமதி காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி வரியில்லா உளுந்துக்கான இறக்குமதி கொள்கை அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் தேதிவரை நீட்டித்து வெளிநாட்டு வர்த்தகத்திற்கான தலைமை இயக்குனரகம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

உள்நாட்டு சந்தைகளில் உளுந்து விலையை பராமரிக்கும் வகையில் இந்நடவடிக்கை.

இந்தியாவிற்கு உளுந்து இறக்குமதி செய்யும் முக்கிய நாடாக மியான்மர் திகழும் நிலையில், தமிழ்நாடு, ஆந்திரம், மத்திய பிரதேசம், உத்திரபிரதேசம், ராஜஸ்தான், மகராஷ்டிரா மாநிலங்கள் உளுந்து உற்பத்தி செய்யும் முக்கிய பிரதான மாநிலங்களாக உள்ளன.

**********

உணவு பாதுகாப்பு

ரசாயன பொருட்களால் நேரிடும் சுகாதார தாக்கங்கள் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடையே உடனடியாக ஏற்படுத்துவதன் அவசியத்தை மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்கள் துறை செயலர் டாக்டர் சுப்ரத்தா குப்தா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் உணவு பாதுகாப்பு தொடர்பான அமர்வில் இன்று உரையாற்றிய அவர், அதிநவீன தொழில்நுட்பங்களை, உணவு பதப்படுத்துதல் துறை நடைமுறைபடுத்துவதாகவும், இவை உணவு பாதுகாப்பு சூழலை உருவாக்குவது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற ஆஹார் 2025 உணவு கண்காட்சியின் தொடர்ச்சியாக இந்த அமர்வு நடைபெறுகிறது.

**********

Morgan – Stanley

உலக அளவில் நிலவும் வர்த்தக நெருக்கடிகளின் மத்தியில் ஆசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் இந்தியா முன்னனியில் உள்ளதாக Morgan – Stanley சர்வதேச ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது.

இந்தியாவின் வலுவான ஏற்றுமதி சேவை, சரக்கு இறக்குமதி பொருட்களை வெகுவாக சாரா நிலை, பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவான அரசின் கொள்கைகள் போன்றவற்றால் இது சாத்தியமாக உள்ளதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவான கொள்கைகளால் நுகர்வோர் செயல்பாடு மற்றும் முதலீடுகளில் இந்தியா மீண்டெழுந்து வளர்ச்சி பாதையில் முன்னேறும் என்றும், இந்த அறிக்கை எடுத்துரைத்துள்ளது.

**********

முதலமைச்சர்

சென்னை மறைமலை நகரில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தாவரவியல் பூங்கா அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், செய்யூறில் 800 ஏக்கரில் புதிய சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கப்படும் என்றார்.

நெம்மேலியில் 4 ஆயிரத்து 276 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் வரும் 2027ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நிறைவடையும் என்று கூறினார்.

வாய்ஸ்

தமிழக அரசின் திட்டங்களால் பெண்களின் சமூக பங்கு அதிகரித்துள்ளதாக தெரிவித்த முதலமைச்சர் மாநிலத்தில் தொழில்துறையில் பெண்கள் அதிக எண்ணிக்கையில் பணியாற்றுவதாக பெருமிதம் தெரிவித்தார்.

கடந்த 3 ஆண்டுகளில் 10 லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீடுகளை தமது தலைமையிலான அரசு உறுதி செய்துள்ளதாக கூறிய அவர் முதல்வரின் முகவரி என்ற துறையின் கீழ் 2 லட்சத்து 71 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஆயிரத்து 285 கோடி ரூபாய் மதிப்பிலான 5 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி 47 முடிவுற்ற பணிகளையும் முதலமைச்சர் துவக்கிவைத்தார்.

நகர்புற பகுதிகளில் பட்டா வழங்கும் திட்டத்தை தொடங்கிவைத்த அவர் 56 ஆயிரம் பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளை முதலமைச்சர் வழங்கினார்.

**********

மூர்த்தி

மதுரை கிழக்கு மாங்குளம் ஊராட்சியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் புதிய நியாயவிலை கட்டிடத்தை மாநில வணிகவரி பதிவு துறை அமைச்சர் திரு.மூர்த்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்துவைத்தார்.

மேலும் 20 கோடியே 72 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 115 முடிவுற்ற திட்ட பணிகளையும் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

**********

நீட்

இளநிலை நீட் தேர்வுக்கான விண்ணப்பங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவுபெறுகிறது.

வரும் கல்வியாண்டிற்கான நீட்தேர்வு மே 4-ம் தேதி நடைபெற உள்ள நிலையில் நாடுமுழுவதும் 20 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

**********

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கன்னியாகுமரி திருநெல்வேலி தென்காசி தூத்துக்குடி மாவட்டங்களில் இன்று கன மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

விருதுநகர் சிவகங்கை மயிலாடுதுறை தஞ்சை திருவாரூர் நாகை புதுக்கோட்டை ராமநாதபுரம் மாவட்டங்களில் கன மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

தென் தமிழக கடலோரம் மன்னார்வளைகுடா குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்றும் நாளையும் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**********

மழை மாவட்டங்கள்

கன்னியாகுமரியில் கடல் சீற்றத்துடன் காணப்படுவதால் விவேகானந்தர் மண்டபம் மற்றும் திருவள்ளுவர் சிலைக்கு மறு அறிவிப்பு வரும் வரை படகு சேவை இயங்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்கரை பகுதிகளுக்கு யாரும் செல்ல வேண்டாம் என்றும், மீனவர்கள் விழிப்புடன் மீன்பிடி உபகரணங்களை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும் மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

நெல்லையில் கன மழை காரணமாக களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் திருக்குறுங்குடி மலைநம்பி கோவிலுக்குச் மறு உத்தரவு வரும் வரை பக்தர்கள், சுற்றுலாப்பயணிகள் செல்ல வனத்துறை தடை விதித்துள்ளது.

இதுகுறிதது எமது செய்தியாளர்

வாய்ஸ்

தூத்துக்குடி கடல் பகுதியில் பலத்த காற்று வீசி வருவதால் நாட்டு படகு விசை படகு மீனவர்கள் கடலுக்குள் செல்லவில்லை.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

நாகை மாவட்டத்தில் கன மழை பெய்துவருவதால் தாழ்வான பகுதிகளில் மழை வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

இந்த மழை காரணமாக கோடை அறுவடை பணிகள் பாதிப்படைந்துள்ளன.

உளுந்து பச்சை பயறு பயிரிட்டுள்ள விவசாயிகள் வயல்களில் தண்ணீர் வடியவைக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

மழையால் நாகை - இலங்கை கப்பல் போக்குவரத்தும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

கடல் சீற்றத்துடன் காணப்படுவதால் படகுகள் கரையிலேயே நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் இம்மழையால் கடந்த சில நாட்களாக நாகை மாவட்டத்தில் நிலவிய கடும் வெப்பம் தணிந்து இதமான சூழல் நிலவுகிறது.

திருவாரூர் மாவட்டத்திலும் கன மழை பெய்து வருவகிறது.

நீடாமங்கலம், திருத்துறைபூண்டி, வலங்கைமான் உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது.

மயிலாடுதுறை மாவட்டம் மணல்மேடு, செம்பனார் கோவில், பொறையார், தரங்கம்பாடி, குத்தாலம், மங்கைநல்லூர் பகுதிகளில் பரவலாக பெய்த மழையால் குளிர்ச்சியான சூழல் நிலுவுவதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை கல்லல் இளையான்குடி, காளையார்கோவில் உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்வதால் அங்கு குளிர்ச்சியான சூழல் நிலவுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**********

சிறுத்தை

கோவை மருதமலை ஓணாப்பாளையத்தில் கடந்த 10 நாட்களாக 4 ஆடுகளை வேட்டையாடிய சிறுத்தையை வனத்துறையினர் மயக்க ஊசி செலுத்தி பிடித்துள்ளனர்.

**********

கோவில்

பெண்களின் சபரிமலை என்று அழைக்கப்படும் கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோவில் மாசி கொடை விழாவின் முக்கிய நிகழ்வான ஒடுக்கு பூஜை இன்று நள்ளிரவு நடைபெறுகிறது.

தமிழகம் மற்றும் கேரள மாநிலத்திலிருந்து ஏராளமான பக்தர்கள் இவ்விழாவில் பங்கேற்பதற்கான மண்டைக்காடில் குவிந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

பாரா தடகளம்

உலக பாரா தடகள போட்டிகள் புதுதில்லியில் இன்று தொடங்குகின்றன.

3 நாட்கள் நடைபெறும் இப்போட்டிகளில் பல்வேறு நாடுகளிலிருந்து 250 மாற்றுத்திறனாளி தடகள வீர வீராங்கனைகள் 90 விளையாட்டு பிரிவுகளில் களமிறங்குகின்றனர்.

**********

பேட்மிண்டன்

All Ingland Open badminton சேம்பியன் பட்ட போட்டிகள் பர்மிங்ஹாமில் இன்று தொடங்குகின்றன.

இந்தியா சார்பில் பி.வி.சிந்து, மாள்விகா பன்சோத், H.S.பிரணாய், லக்ஷயா சென், சாத்விக் சாய்ராஜ், ரான்கிரெட்டி, ட்ரிஸா ஜாலி, காயத்ரி கோபிசந்த் உள்ளிட்டோர் களமிறங்குகின்றனர்.

**********

கிரிக்கெட்

மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்றிரவு ஏழரை மணிக்கு மும்பை இண்டியன்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

**********

டென்னிஸ்

கலி.ஃ.போர்னியாவில் நடைபெறும் இண்டியன் வெல்ஸ் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு யூக்கி பாம்ப்ரி ஸ்வீடனின் ஆன்ட்ரே கோரன்சன் இணை முன்னேறியுள்ளது.

இன்றுகாலை நடைபெற்ற போட்டியில் பாம்ப்ரி இணை போலந்து, பெல்ஜியம் இணையை தோற்கடித்தது.

அடுத்த சுற்றில் ஃ.பின்லாண்ட், பிரிட்டன் இணையை யூக்கி இணை எதிர்கொள்கிறது.

முன்னதாக நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் ரோஹன் போபன்னா - இவான் இணை தோல்வி அடைந்து ஆட்டத்தை விட்டு வெளியேறியது.

**********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

**********